THIRUKKURAL

By

Thiruvalluvar

திருவள்ளுவர்

அருளிச் செய்த

திருக்குறள்

1996

Compiled by: N.C. NAIDOO

மொழி
26

Print :

Japonica Printing Media,
7,Sripuram 2nd St.,
Royapettah,
Madras - 14

© : 8261790
Fax : 8257158

N. MAHALINGAM, B.Sc., F.I.E
CHAIRMAN
SAKTI GROUP OF COMPANIES

FOREWORD

Tirukkural is an ancient Tamil work authored by the Tamil Savant Tiruvalluvar. Next to the Holy Bible, the Tirukkural has been subjected to the maximum number of translations. Naturally it is considered as great as the Bible. No other work can equal it in moral teachings.

This compilation, which contains ninety moral aphorisms, selected from eighteen chapters of Valluvar's kural with Tamil paraphrase and English translation make the work effective. Each chapter, with five aphorisms has been effectively set to music and sung.

Tiruvalluvar's unique contribution to Tamil literature is the Tirukkural. It consists of three parts, the first being Aram (அறம்- Virtue) 38 chapters; the second Porul (பொருள்-King, his government etc) with 70 chapters, and the Kamam (காமம் -love) with 25 chapters. Each chapter having ten couplets and the whole book consists of 133 chapters and 1330 Kurals or couplets.

The five kurals chosen from each important chapter give a transliteration of the same immediately below the Tamil text, an English translation and meaning of the relevant Kural and a note on each chapter.

This book deserves to be called as a book of morals. Mr. Naidoo of South Africa deserves every congratulation for having brought out this excellent volume of Tirukkural. This is a publication meant for Tamils as well as non-Tamils.

It will go a long way to make the English speaking population of the world to know the essence of Kural, the greatness of Valluvar and glory of Tamil language.

I wish the publication every success.

Madras - 600 032 **N . Mahalingam**

உ

சிவமயம்

திருக்குறள்

(மூலமும் ஆங்கிலமொழி பெயர்ப்பும்
சொல்தொகுப்பும் பொழிப்புரையும்)

THIRUKKURAL

(Text with Translation in English, Word Study and Tamil Paraphrase) with Transliteration

Compiled by

N.C. NAIDOO

பு.ரா. கோகுலகிருஷ்ணன் சென்னை-20, தமிழ்நாடு

முன்னாள் தலைமை நீதிபதி.

வாழ்த்து

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று முரசு கொட்டிய மாபுலவன் பாரதியின் கனவு நினைவாகும் வண்ணம் இவ்வரிய புத்தகத்தை ஆப்பிரிக்கா கண்டத்தில் அமைந்துள்ள தென்னாப்பிரிக்க மக்கள் படித்துப் பயன் பெறப் போகின்றனர். மதச்சார்பற்று, மனிதாபிமானத்தில் நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவரும் போற்றிப் படிக்க வேண்டிய நூல் திருக்குறள். உலக நாகரிகம் ஒத்துக் கொள்ளும் சீரிய ஒழுக்க நியதிகளை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழன் உணர்ந்திருந்தான் என்ற பெருமைக்குப் பெட்டகம் திருக்குறள். மற்றவனுக்கு எண்ணத்தாலும் தீங்கை எண்ணாத அறத்தினை சிறப்பாக "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன் ஆகுல நீர பிற" என்ற ஆழமான ஈரடிகளால் வையத்தார்க்கு அறிவு புகட்டுகின்றார் வள்ளுவர். மூவுலகும் ஈரடியால் அளந்த பெருமை திருமாலுக்கு. ஏழுலகும் ஈரடியைப் போற்றும் பெருமை திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளுக்கு. ஈடு இணையற்ற ஒழுக்க நூல். வற்றாதகருத்துக்கள் பயில்தொறும், பயில்தொறும் ஊறிடும் மணற்கேணி. இந்நூலைப் பெற்றதால் தமிழகம் பெருமை கொண்டது. பாரதம் உயர்ந்தது. இப்பரந்த ஞாலம் பயன் பெற்றது, அப்பயன் ஊடுருவிப் பாய வெளிவரும் புத்தகம் இப்பதிப்பு. இருளடைந்த நாடு என்று எவரோ சொன்னார் இனி அந்த இருள் தென்னாப்பிரிக்காவை அகன்றிடத் தோன்றிடும் ஆதிபகவனாக இந்நூல் பயன் நல்குவதாக.

பு.ரா.கோகுலகிருஷ்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
C.I.T. CAMPUS, ADAIYARU, T.T.T.I. POST, (THARAMANI), MADRAS - 600 113.
Dr. S. RAMAR ILANGO
DIRECTOR

8 - 2 - 1996

MESSAGE

I take the privilege of giving this message to the book entitled *'THIRUKKURAL'* compiled by an octogenarian Thiru N.C. NAIDOO. His erudite scholarship is well known to all. He always succeed in all his endeavours. Every Tamilian should feel proud of him. He did commendable works in the promotion of Tamil Language and Literature in South Africa. His relentless yeoman service to the Tamil Community in South Africa deserves to be appreciated. As an individual, he performs the work of an Institution.

Thiru. N.C. Naidoo is awarded and rewarded with many titles for his service excellence by many institutions in India and abroad.

I have gone through his *'THIRUKKURAL'* book. The 90 couplets have been carefully selected and the simple translation for the same is more effective. The phonetic transliteration used in this book is familiar to South African Tamils. The approach is pragmatic. The painstaking effort of Thiru N.C. Naidoo to give the essence of Thirukkural to the Tamil Fraternity in South Africa is laudable.

On behalf of this Institute, I sincerely congratulate and wish him success in all his endeavour in South Africa for the promotion of Tamil Language Culture and Literature in South Africa.

Dr. S. RAMAR ILANGO

PREFACE

This compilation contains ninety couplets selected from eighteen chapters in "The Thirukkural" with Tamil Paraphrase and Translation in English. Each Chapter, with five couplets is set to music and sung. It is hoped that both young and old would be able to recite the couplets and eventually have some knowledge of Valluvar's great moral teachings and at the same time appreciate our rich Tamil Literature and our glorious Tamil tradition.

To encourage, maintain, know, spread and follow the great moral teachings of the profound scholar and sage Thiruvalluvar, I offer my humble suggestions to organisations.

1. To hold annually Thiruvalluvar's Day in January
2. Eisteddfod -- the item Thirukkural also be included for the adults.
3. To encourage students and outstanding andidates for further studies in Tamil locally or in India.
4. Quotations from the Kural ought to be a regular feature at our meetings, discourses, forums to drive home a particular point under discussion.
5. Efforts be made to learn the remaining Couplets and Chapters which are not in this book. For further reading Rev. G.U,Pope's translation of Thirukkural is suggested. It is simple and easy to understand.
6. Text books in Tamil for all the classes should contain some selected couplets to be read and memorised.
7. As the couplets are set to music, some of these could be sung at our regular prayer service. Cassettes are also available.

We are gifting this book to organisations in memory of our 60th Wedding Anniversary. Organisations may request for some donation for their projects,

Finally we have to become conscious of the fact that the soul-stirring hymns of Thevaram, Thiruvachagam, Thiruppugazh, Thiru Arutpa and the beautiful philosophy of Thirukkural with its high moral teachings, provide a most valuable guidance for all of us.

May our thoughts and efforts be crowned with success towards the propagation of Tamil, Saivism and the great moral teachings, by His Grace.

N.C.Naidoo

ACKNOWLEDGEMENT

I am grateful to the following for having made this Publication possible:

Dr. N.Mahalingam B.Sc.,F.I.E President of the Ramalingar Pani Mandram, for his enlightened Foreword, for his continuous purposeful encouragements and guidance for all my projects

Yogi Suddhananda Bharathi for allowing the use of his book the "Thirukkural" for the translation of Tamil Text into English

Thiru Vadalur Ramalingar of the Ramalinga Mission for appropriate meaning, both in Tamil and English, of the difficult words

Thiru K.M.Venkataramiah of Annamalai University Thirukkural Research Section for the biography of Valluvar, both in Tamil and English.

Thiru P.R. Gokulakrishnan, Judge High Court (Retd.) for his message

Sri K.M.Gopinath B Sc., for Transliteration

Sri K.M.Krishnamurthy for suggestions and guidance

Srimathi Shanthi Nagarajan, the Vocalist

Sri P.Pakkirisamy, the Violinist

Sri T.R.Nagarajan for his moral support and in seeing through the recording

The Christian Arts and Communication Service Recording Studio in Madras

JAPONICA Printing Media (Amudha Nilayam) for Printing execution

திருவள்ளுவர்

கே.எம்.வேங்கடராமையா M.A.

தமிழில் பல நீதி நூல்கள் உள்ளன. அவற்றுள் மிகச் சிறந்தது திருக்குறள். இது மூன்று பால்களாக- பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. அதனால் இதற்கு முப்பால் என்றும் பெயருண்டு. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பன அந்த மூன்று பால்கள். அறத்துப்பாலில் 38 அதிகாரங்கள் உண்டு; பொருட்பாலில் 70 அதிகாரங்கள்; காமத்துப்பாலில் 25 அதிகாரங்கள். ஆக மொத்தம் 133 அதிகாரங்கள். ஒவ்வொரு அதிகாரத்திலும் 10 குறள்கள் உண்டு ஆகவே திருக்குறளில்1330 குறள்கள் உள்ளன.

முதல் அதிகாரம் கடவுள் வாழ்த்து. அறத்துப்பால் இல்லறம், துறவறம் என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இல்லறமே சிறந்தது என்று திருவள்ளுவர் கூறுவார். திருவள்ளுவர் கூறும் அறங்கள் சாமானியமானவை; ஆனால் கடைப்பிடித்து ஒழுகுவதற்கு கடினம் ஆனவை. பொய் சொல்லாதே, கள்ளுண்ணாதே, சூது ஆடாதே திருடாதே, கோபம் கொள்ளாதே, பிறர் மனைவியை இச்சியாதே, பிறர் பொருளைக் கவராதே. இது போன்ற பல நீதிகளை வற்புறுத்தியுள்ளார் திருவள்ளுவர். அரசன்; அமைச்சர் முதலியவர்களுக்குக் கூறிய ஒழுக்கங்கள் பொது மக்களுக்கும் பொருத்தமானவையாக உள்ளன.

இத்தகைய சிறந்த நூலை எழுதியவர் திருவள்ளுவர். இவர் சென்னையின் ஒரு பகுதியாகிய மயிலாப்பூரில் பிறந்தவர் என்று கூறுவர். இவர் மதுரையிலும் வாழ்ந்தவர் என்று திருவள்ளுவர் மாலை என்ற நூலில் உள்ள ஒரு செய்யுளால் அறியலாம்.

திருவள்ளுவமாலை என்பது சுமார் 40 வெண்பாக்களைக் கொண்ட நூல். ஒவ்வொரு பாடலை ஒவ்வொரு சங்கப் புலவர் பாடினார் என்பர். ஒரு பாடல் "சமஸ்கிருதத்தில் வேதம் இருப்பது போலத் தமிழில் திருக்குறள் இருக்கிறது" என்று கூறும். இன்னொரு பாடலில் "வடமதுரையில் கண்ணன் சிறந்து விளங்கியது போலத் தென்மதுரையில் திருவள்ளுவர் சிறந்து விளங்கினார்"என்று சொல்கிறது.

திவாகரம் என்றொரு நிகண்டு இருக்கிறது. அதில் 'வள்ளுவன்' என்ற பெயர் அரசனுக்குச் செயலர் ஆக இருப்பவர்களைச் குறிக்கும் என்று கூறுகிறது. ஆகவே பண்டைய தமிழக அரசாங்கத்தில் திருவள்ளுவர் ஒரு உயர் அலுவலராக இருந்திருக்கலாம் என்பது உறுதி.

திருவள்ளுவரைப் புலவர்கள் பல பெயர்களால் குறித்து இருக்கின்றனர். தெய்வப்புலவர், செநநாப்போதார், பொய்யில்புலவர் முதலியன அவரைக் குறிக்கும் பெயர்களாகும். திருக்குறளும் பல பெயர்களால் குறிக்கப்படும் அது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இருப்பதால் முப்பால் எனப்படும். சிறந்த செய்திகளைத் திருக்குறள் கூறுவதால் ''பொருளுரை'' எனப்படும். உண்மையான பொருள்களைப் கூறுவதால் 'வாய்மொழி' எனப்படும். திருக்குறளுக்குப் பல பழைய உரைகள் உண்டு. அவற்றுள் 'பரிமேலழகர்' உரையே சிறந்தது என்று கூறுவர்.

திருவள்ளுவர் இல்லற வாழ்க்கையை மேற்கொண்டார். அவருடைய வாழ்க்கைத் துணைவியின் பெயர் வாசுகி. இவர்களது வாழ்க்கையில் பல அற்புதங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

இந்த நூற்றாண்டில் வாழ்ந்த மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆவார். அவர் சிறந்த தமிழ்ப் புலவர்களாக மூன்றுபோரைப் போற்றுகிறார். திருவள்ளுவர், இளங்கோ அடிகள், கம்பர் ஆகியோரே அந்த மூவர். வள்ளுவரை உலக மகாகவியாகவே கவியரசர் பாரதியார் வணங்குகிறார்.

> *''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து*
> *வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'*

என்று பெருமிதத்துடன் பாடிப் பரவுகிறார்.

THIRUVALLUVAR AND HIS KURAL

K.M. Venkataramiah M.A.,

The Thirukkural is the oldest and the best of Didactic Literature in Tamil. It is known after the name of the poem of the text viz., Kural. The kural is a couplet or a poem of two lines, metrical feet.

The author of the Kural is popularly known by the name Thiruvalluvar and facts about his historical background is still unknown. It is said that he was born at Mylapore, a part of the city of Madras. According to a stanza found in a minor poem called Thiruvalluvamalai (திருவள்ளுவமாலை), he is considered to have lived in Madurai also.

Scholars of repute are of opinion that he would have held a high post in the Government of Tamilagam in the Pre-Sangam period. According to a lexicon called Thivakara Nighandhu (திவாகர நிகண்டு) , "Valluvan" is an office of dignity in the court of the Tamil Kings. It seems to be an office of the private secretary of the King.

His wife was called by the name Vasuki (வாசுகி) , a chaste lady who was much devoted to her husband.

Thiruvalluvar's unique contribution to the Tamil Literature is the Thirukkural. It consists of three parts, the first being Aram (அறம்-Virtue) with 38 chapters; the second porul (பொருள்- the king, his Government etc.,) with 70 chapters, and the kamam (காமம்-love) with 25 chapters. Each chapter having ten couplets and the whole book consisting of 133 chapters and 1330 Kurals or couplets.

There is a minor poem called Thiruvalluva Malai (திருவள்ளுவமாலை-the garland of poetry on Thiruvallu). It is a collection of about 40 Stanzas each attributed to Sangam poetry of the 1st or 2nd century A.D. One of the stanzas of Thiruvalluvamalai goes to say that as there are the Vedas in Sanskrit, there is the Thirukkural in Tamil. Another says that Krishna was a polestar at the Northern

Madurai and that Valluvar was at the Southern Madurai. One more stanza compares Thirukkural to a light; the first part Aram is the lamp, (அகல்) the porul is the wick and the Kamam is the ghee to burn the lamps.

The Author of the Kural is known by several names as Theivappulavar - a divine poet, Poyyil pulavar (பொய்யில் புலவர்) a true poet etc. In the same way the Thirukkural is also referred to by many eulogistic names one being Muppal (முப்பால்) a book of Three chapters. The Thirukkural has ten commentaries; a few alone are available and Parimelazhagar's commentry (பரிமேலழகருரை) is considered to be the best one.

பொருளடக்கம் - Contents

1.	பதிப்புரை	Preface
2.	முன்னுரை	Foreword
3.	வாழ்த்து	Message
4.	நன்றியுரை	Acknowledgement
5.	திருவள்ளுவர் வரலாறு	Saint Thruvalluvar Life Sketch (in Tamil and English)

Couplets	திருக்குறள் அதிகாரம்	Thirukural sections
1-10	i. கடவுள் வாழ்த்து	The Praise of God
71-80	ii. அன்புடைமை	Loving Kindness
81-90	iii. விருந்தோம்பல்	Hospitality
100-110	iv. செய் நன்றி அறிதல்	Gratitude
111-120	v. நடுவு நிலைமை	Equity
121-130	vi. அடக்கமுடைமை	Self-Control
151-160	vii. பொறையுடமை	Forgiveness
181-190	viii. புறங்கூறாமை	Against Slander
222-230	ix. ஈகை	Charity
241-250	x. அருளுடைமை	Compassion
291-299	xi. வாய்மை	Veracity
300-310	xii. வெகுளாமை	Restraining Anger
391-400	xiii. கல்வி	Education
421-430	xiv. அறிவுடைமை	The Possession of Wisdom
611-620	xv. ஆள்வினை உடைமை	Manly Effort
781-789	xvi. நட்பு	Friendship
961-970	xvii. மானம்	Honour
991-1000	xviii. பண்பு உடைமை	Courtesy

கடவுள் வாழ்த்து

கடவுள்தான் உலகத்தின் ஒரே தலைவர், அவர் 'அ' என்ற எழுத்தைப்போன்றவர்; தூய அறிஞர்; அன்பர் இதயத்தில் விளங்குபவர் ஒப்புமை இல்லாதவர்; அவர்தான் நம் பிறவிக்கடலைக் கடக்க உதவுகிற கப்பல்.

1. *அகர முதல எழுத்து எல்லாம் ஆதி*
Aghara mudhala ezhuththu ellaam aathi
பகவன் முதற்றே உலகு.
Bagavan mudhatrē ulagu.

2. *கற்றதனால் ஆய பயன்என்கொல் வால் அறிவன்*
Katradhanaal aaya payan en kol vaal arrivan
நல்தாள் தொழாஅர் எனின்.
Nal thaall thozhaar enin.

3. *மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்*
Malar misai ēginaan maann adi sērndhthaar
நிலமிசை நீடுவாழ்வார்.
Nila misai needu vazhvaar.

7. *தனக்குஉவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்*
Thanakku uvamai illaathaan thaall sērndhthaarkku allaal
மனக்கவலை மாற்றல் அரிது.
Manakkavalai maatral aridhu

10. *பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
Pirravip perungkadal neendhuvar neendhaar
இறைவன் அடி சேராதார்.
Irraivan adi sēraathaar.

THE PRAISE OF GOD

1. **'A' leads letters; the Ancient Lord**
   Leads and lords the entire world.

   A leads all letters; the Ancient Almighty leads the cosmic life and its evolution.

2. **That lore is vain which does not fall**
   At His good feet who knoweth all.

   God is perfect knowledge. Learning is vain without worshipping His feet and walking His path

3. **Long they live on earth who gain**
   The feet of God in florid brain.

   God walks on the psychic bloom. Long they live on the earth who clasp His feet.

7. **His Feet, whose likeness none can find,**
   Alone can ease the anxious mind.

   God is unequalled; none gets rid of mental worries without surrender at His feet.

10. **The sea of births they alone swim,**
    who clench His feet and cleave to Him.

    They alone cross the sea of births who adore the feet of God, the mystic Pilot; none else.

1.	அகரம்	'அ'	alphabet 'A'
	ஆதி	முதல்	first or primal
	பகவன்	கடவுள்	God
	உலகம்		world
	முதல்		first
2.	கற்றதனால்	படித்ததனால்	through learning
	ஆய	உண்டான	to become
	பயன்	பலன்	use

	வால்	தூய	pure
	தாள்	திருவடி	sacred feet
3.	மலர்மிசை	இதயம்	on the heart
	ஏகினான்	விரும்பி அடைதல்	reached; attained
	நிலம்மிசை	இந்த உலகத்தில்	on earth
7.	உவமை	ஒப்பு; அதைப் போல	likeness; similitude
	அரிது	கடினமானது	very difficult
10.	பிறவி	பிறப்பு	birth
	இறைவன்	கடவுள்	God
	சேராதார்	நினையாதார்	those who have not meditated upon

கடவுள் வாழ்த்து

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. 1

தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளைத் தொழாமல் இருப்பாரானால், அவர்கற்ற கல்வியினால் ஆகியபயன் என்ன? 2

அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளின் சிறந்த திருவடிகளை இடைவிடாமல் நினைக்கின்றவர் இன்ப நில உலகில் நிலைத்து வாழ்வர். 3

தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்துகின்றவர்க்கு அல்லாமல், மற்றவர்க்கு மனக் கவலையை மாற்ற முடியாது. 7

இறைவனுடைய திருவடிகளைப் பொருந்துகின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும்; மற்றவர் கடக்க முடியாது. 10

அன்புடைமை

அன்பு பெரும் சக்தி; அதை யாரும் தடுக்க முடியாது. அன்பர் தமக்கு உரியன எல்லாம் பிறர்க்கே வழங்குவர்; அன்பு இல்லாதவர் பட்டுப்போன மரத்தைப் போன்றவர். அன்பு என்னும் அகத்து உறுப்பு இல்லாவிடில் உடலின் புறத்து உறுப்புகளால் எந்தப்பயனும் இல்லை. அன்புடையவர்தான் நித்தியமான வாழ்வைப் பெறுவர்.

71. *அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்*
Anbirrkum unndō adaikkum thaazh aarvalar
புன்கண்நீர் பூசல் தரும்.
Punkann neer pūsal tharum.

72. *அன்புஇலார் எல்லாம் தமக்குஉரியர் அன்பு உடையார்*
Anbu ilaar ellaam thamakku uriyar anbu udaiyaar.
என்பும் உரியர் பிறர்க்கு.
Enbum uriyar pirrarkku

78. *அன்புஅகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பால் கண்*
Anbu agaththu illaa uyirvaazhkkai vanpaal kann
வற்றல் மரம்தளிர்த்து அற்று.
Vatral maram thallirthtu attru.

79. *புறத்துஉறுப்பு எல்லாம் எவன் செய்யும் யாக்கை*
Purrathuurruppu ellaam evan seyyum yaakkai
அகத்துஉறுப்பு அன்பு இல் அவர்க்கு.
Agaththu urruppu anbu il avarkku.

80. *அன்பின் வழியது உயிர்நிலை அஃதுஇலார்க்கு*
Anbin vazhiyathu uyir nilai akthu ilaarkku
என்புதோல் போர்த்த உடம்பு.
Enbuthōl pōrththa udambu.

LOVING KINDNESS

71. What bolt can bar true love in fact?
The trickling tears reveal the heart.

There is no bar, no bolt against love. The heart's love is revealed in trickling tears.

72. To selves belong the loveless ones;
To oth'rs the loving e'en to bones.

Loveless people belong to themselves. Loving hearts sacrifice even their bones for others.

78. Life bereft of love is gloom
Can sapless tree in desert bloom?

A dead desert-tree cannot bloom again. Even so a life devoid of psychic love is barren, bloomless.

79. Love is the heart which limbs must move,
Or vain the outer parts will prove.

Vain are physical parts, if our being is not moved by psychic love, the heart of beings.

80. The seat of life is love alone;
Or beings are but skin and bone!

Life abides in love. It is the seat of the soul.Devoid of love, men are only skin-and-bone body.

71.	தாழ்	தாழ்ப்பாள்	Bolt
	ஆர்வலர்	விரும்புவோர்	those who desire
	புன்	சிறு	small
	பூசல்தரும்	வெளிப்படுத்தும்	to reveal; disclose
72.	அன்பு	பிரியம்	love
	என்பு	எலும்பு	bone
	உரியர்	சொந்தமானவர்	belong to oneself; those attached

78.	அகம்	உள்ளம்	mind
	வற்றல்	காய்ந்த	dry
79.	புறத்து	வெளி	outward
	யாக்கை	உடம்பு	body
	உறுப்பு	கை, கால்	limbs
80.	வழியது	மேலானது	inspired with
	உயிர்நிலை	உடம்பு	body with real life
	போர்த்த	மூடப்பட்ட	overlaid; covered

அன்புடைமை

அன்புக்கும் அடைத்துவைக்கும் தாழ் உண்டோ? அன்புடையவரின் சிறு கண்ணீரே (உள்ளே இருக்கும் அன்பைப்) பலரும் அறிய வெளிப்படுத்திவிடும். 71

அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வர்; அன்பு உடையவர் தம் உடம்பையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர். 72

அகத்தில் அன்பு இல்லாமல் வாழும் உயிர்வாழ்க்கை (வளமற்ற) பாலை நிலத்தில் பட்ட மரம் தளிர்த்தாற் போன்றது. 78

உடம்பின் அகத்து உறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு உடம்பின் புறத்து உறுப்புக்கள் எல்லாம் என்ன பயன் செய்யும்? 79

அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர் நிலைத்த உடம்பாகும்; அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல்போர்த்த வெற்றுஉடம்பே ஆகும். 80

விருந்தோம்பல்

விருந்தினரை உபசரிக்கவே குடும்ப வாழ்க்கை நடத்துகிறோம். இத்தகைய வீட்டில்தான் செல்வம் வளர்கிறது.

விருந்தினரை உபசரிப்பவர்களது நிலம் அவர்கள் விதைக்காமலே விளைகிறது. விருந்தினர்க்கு உதவாதவர் பின்பு பொருளை இழந்துவிட்டோமே என்று வருந்துவர். முகந்து பார்த்தவுடனே வாடிவிடும் அனிச்ச மலர் போல், முகம் மலராமல் வேறுபட்டு பார்க்கும்போதே விருந்தினர் வாடிவிடுவர்.

81. *இருந்து ஓம்பி இல்வாழ்வது எல்லாம், விருந்து ஓம்பி*
Irundhu Ōmbi Ilvaazhvadhu Ellaam Virundhu Ōmbi
வேளாண்மை செய்தல் பொருட்டு.
Vēllaannmai seiythal Porutu.

84. *அகன் அமர்ந்து செய்யாள் உறையும் முகன் அமர்ந்து*
Agan Amarndhu Seyyaall Urraiyum Mugan Amarndhu
நல் விருந்து ஓம்புவான் இல்.
Nal Virundhu Ōmbuvaan il.

85. *வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்து ஓம்பி*
Viththum Idal Vēnndum Kollō Virundhu Ōmbi
மிச்சில் மிசைவான் புலம்.
Michchil Misaivaan Pulam.

88. *பரிந்து ஓம்பி பற்றுஅற்றேம் என்பர் விருந்து ஓம்பி*
Parindhu Ōmbi Patru Atrēam Enbar Virundhu Ōmbi
வேள்வி தலைப் படாதார்.
Vēllvi Thalaip Padaathaar.

90. *மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து*
Mōppak Kuzhaiyum Anichcham Mugamthirindhu
நோக்கக் குழையும் விருந்து
Nōkkak Kuzhaiyum Virundhu.

HOSPITALITY

81. **Mend set up home, toil and earn**
To tend the guests and do good turn.

To serve the guests and do generous good to all' these are the purpose of establishing home life.

84. **The goddess of wealth will gladly rest**
Where smiles welcome the worthy guest.

The goddess of wealth will gladly abide in the house where pleasing smiles welcome worthy guests.

85. **Should his field be sown who first**
Feeds the guests and eats the rest?

Who feeds guests first and eats next, will have bumper crops even without the trouble of sowing.

88. **Who loathe guest-service one day cry.**
"We toil and store; but life is dry".

Those who lack good guest-service will lament crying "we toiled and stored; but life is dry".

90. **Anicham smelt withers: like that**
A wry-faced look withers the guest.

The soft Anich flower withers when smelt. The guests' heart withers at wry-faced look.

81.	ஓம்பி	காத்து	protect
	இல்வாழ்வது	குடும்பம் நடத்துவது	run the family; conducting a home life
	வேளாண்மை	உதவி	help
	விருந்து	விருந்தினர்	guests
84.	அகன்	மனம்	mind
	அமர்ந்து	விரும்பி	to like
	உறையும்	தங்கும்	to stay

85.	வித்து	விதை	seed
	இடல்	விதைத்தல்	to sow
	கொல்லோ	கேள்விக்குறிப்பு	questioning
			remaining food; left-over
	மிசை	உண்ணல்	to eat
	புலம்	வயல்	field
88.	பரிந்து	விரும்பி	to like
	பற்று	விருப்பு	attention
	வேள்வி	பெரும் உதவி	divine help
	தலைப்படாதார்	மேற்கொள்ளாதவர்	non-doer
90.	மோப்ப	முகந்து பார்க்க	to smell
	குழை	வாடு	wither
	அனிச்சம்	ஒருவகை மலர்	a sensitive flower (touch-me-not)

விருந்தோம்பல்

வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்யும் பொருட்டே ஆகும். 81

நல்ல விருந்தினராய் வந்தவரை முகமலர்ச்சி கொண்டு போற்றுகின்றவனுடைய வீட்டில் மனமகிழ்ந்து திருமகள் வாழ்வாள். 84

விருந்தினரை முன்னே போற்றி உணவளித்து மிஞ்சிய உணவை உண்டு வாழ்கின்றவனுடைய நிலத்தில் விதையும் விதைக்க வேண்டுமோ? 85

விருந்தினரை ஓம்பி அந்த வேள்வியில் ஈடுபடாதவர் பொருள்களை வருந்திக் காத்துப் (பின்பு இழந்து) பற்றுக்கோடு இழந்தோமே என்று இரங்குவர். 88

அனிச்சப்பூ மோந்தவுடன் வாடிவிடும்; அதுபோல், முகம் மலராமல் வேறுபட்டு நோக்கியவுடன் விருந்தினர் வாடி நிற்பர். 90

செய்ந்நன்றி

முன் எந்த உதவியும் பெறாதவர் செய்கிற உதவியே ஈடற்றது. தக்க காலத்தில் செய்கிற உதவி உலகத்தைவிட உயர்ந்தது. ஒருவர் செய்த உதவியை மறவாமலிருப்பதே அறம். முன்பு உதவியவர் செய்த துன்பமும், அவர் முன்னர் செய்த நன்மையை எண்ணும்போது இன்பமாகவே தோன்றும். நன்றி மறந்தவர் வாழவே இயலாது.

101. *செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்*
Seyyaamal seydha udhavikku vaiyagamum
வானகமும் ஆற்றல் அரிது.
Vaanagamum aatral aridhu.

102. *காலத்தினால் செய்த நன்றி சிறிதுஎனினும்*
Kaalaththinall seydha nandri sirridhu eninum
ஞாலத்தின் மாணப் பெரிது.
Gnaalaththin maannap peridhu.

104. *திணைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்*
Thinaith thunnai nandri seyinum panaiththunnai yaak
கொள்வர் பயன்தெரி வார்.
Kollvar payan theri vaar

108. *நன்றி மறப்பது நன்றன்று நன்று அல்லது*
Nandri marrappadhu nandrandru nandru alladhu
அன்றே மறப்பது நன்று.
Andrē marrappadhu nandru.

110. *எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் உய்வு இல்லை*
en nandri kondraarkkum uyvu unndaam uyvu illai
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.
Seyn nandri kondra magarrku.

GRATITUDE

101. Unhelped in turn good help given
Exceeds in worth earth and heaven.

A kind help given without obligation is worth more than gift of earth and heaven.

102. A help rendered in hour of need
Though small is greater than the world.

Though small, a timely help in need is much greater than the world at large.

104. Help given though millet-small
Knowers count its good palm-tree tall.

Though small like a millet-seed, a good done in need is considered great in effect like a tall palmyra

108. To forget good turns is not good
Good it is over wrong not to brood.

To forget a good turn is not good; but it is good to forget the same day, the wrong done to you.

110. The virtue-killer may be saved
Not benefit-killer who is damned.

There is redemption for The killer of any virtue. But the ungrateful killer of benefits is doomed for ever.

101.	வையகம்	உலகம்	world
	ஆற்றல்	கொடுத்தல்	to give
	அரிது	கடினம்	rare
	வானகம்	மேல்உலகம்	heaven
102.	காலம்	நேரம்	time
	ஞாலம்	உலகம்	world
	மாணப்பெரிது	மிகப்பெரிது	very big
104.	தினை	சிறிய(millet)	small

	பனை	பெரிய (palm)	big
	தெரிவார்	அறிவார்	those who understand
	துணை	அளவு	measure
108.	மறப்பது	நினைவு மறைதல்	to forget
	அன்றே	அப்பொழுதே	at once
110.	கொன்றார்	மறப்பவர்	who forgets
	உய்வு	வாழ்க்கை	life

செய்ந்நன்றி அறிதல்

தான் ஓர் உதவியும் முன் செய்யாதிருக்கப் பிறன் தனக்கு செய்த உதவிக்கு மண் உலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடு ஆக முடியாது. 101

உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிய அளவாக இருந்தாலும், அதன் தன்மையை ஆராய்ந்தால் உலகத்தை விட மிகப் பெரிதாகும். 102

ஒருவன் தினை அளவாக உதவியைச் செய்த போதிலும் அதன் பயனை ஆராய்கின்றவர், அதனைப் பனை அளவாகக் கொண்டு போற்றுவர். 104

ஒருவர் முன்செய்த நன்மையை மறப்பது அறன் அன்று. அவர் செய்த தீமையைச் செய்த அப்பொழுதே மறந்து விடுவது அறம் ஆகும். 108

எந்த அறத்தை அழித்தவர்க்கும் (தப்பிப்) பிழைக்க வழி உண்டாகும்; ஒருவர் செய்த உதவியை மறந்து அழித்தவனுக்கு உய்வு இல்லை. 110

நடுவு நிலைமை

நடு நிலைமை என்பது என்ன? தகுந்ததைத் தெரிந்து கொண்டு நடப்பதே நடுவு நிலைமையாகும். நடு நிலைமை உடையவரை எப்படி அறிவது? அவருடைய நல்ல பெயரால்தான் அறியமுடியும். பிறர்க்குக் கொடுத்து வறுமை அடைவதைக் கேடு என்று பெரியோர் கருத மாட்டார். தராசு போல நடப்பவர்தான் பெரியவர். வியாபாரம் செய்கிறபோது பிறர் பொருளைத் தம் பொருளைப்போல் மதிப்பவர்தான் நடு நிலைமையுடைய பெரியோர் ஆவர்.

111. *தகுதி என ஒன்று நன்றே பகுதியால்*
Thagudhi ena ondru nandrē pagudhiyaal
பால்பட்டு ஒழுகப் பெறின்.
Paalpattu ozhugap perrin.

114. *தக்கார் தகவுஇலர் என்பது அவர் அவர்*
Thakkaar thagavu ilar enbadhu avar avar
எச்சத்தால் காணப்படும்.
Echchaththaal kaannap padum.

117. *கெடுவாக வையாது உலகம் நடுவாக*
Keduvaaga vaiyaadhu ulagam naduvaaga
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.
Nandrikkann thangkiyaan thaazhvu.

118. *சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால்*
Samanseydhu seerthūkkum kōlpōl amaindhu orupaal
கோடாமை சான்றோர்க்கு அணி.
Kōdaamai saandrōrkku anni.

120. *வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்*
Vaannigam seyvaarkku vaannigam pēnnip
பிறவும் தமபோல் செயின்.
Pirravum thamapōl seyin.

EQUITY

111. Equity is supreme virtue
It is to give each man his due.

Equity is the great virtue of propriety. It is to give each. (friend or foe) what he is worth.

114. The worthy and the unworthy
Are seen in their posterity.

The just and the unjust are proved by the nature and well-being of their progeny.

117. The just reduced to poverty
Is not held down by equity.

The world does not lookdown on the poverty of the upright and virtuous men.

118. Like balance holding equal scales
A well-poised mind is jewel of the wise.

The straight beam of a balance holds equal scales. Such an impartial, well-poised mind adorns the wise.

120. A trader's trade prospers fairly
When his dealings are neighbourly.

An ideal trader prospers well when he looks after other's interest as his own.

111.	தகுதி	பொருத்தம்	fitness
	பகுதி	பிரிவு	category(i.e.) friend foe or stranger
	ஒழுக	நடக்க	behave
	பெறின்	பெறுதல்	to get
114.	தக்கார்	தகுதியானவர்	the worthy
	தகவிலர்	தகுதியில்லாதவர்	the unworthy
	எச்சம்	மக்கள்	progeny

117.	கெடுவாக	அழிவாக	destructive
	வையாது	கருதாது	will not consider
	தங்கியான்	தங்கியிருப்பவன்	one who stays
	தாழ்வு	வறுமை	poverty
118.	சமன்	நேர்	equalising
	சீர்தூக்கு	ஆராய்தல்	balancing
	கோடாமை	வளையாமை	without bending or inclining
	அணி	அழகு	beauty
120.	வாணிகம்	வியாபாரம்	trade
	பேணி	பாதுகாத்து	protecting
	பிறவும்	மற்றவை	the rest too

நடுவு நிலைமை

அந்தந்தப் பகுதிதோறும் முறையோடு பொருந்தி ஒழுகப் பெற்றால், நடுவுநிலைமை என்று கூறப்படும் அறம் நன்மையாகும். 111

நடுவுநிலைமை உடையவர் நடுவுநிலைமை இல்லாதவர் என்பது அவரவரது மக்களின் பண்பாலும் வளத்தாலும் பெறப்படும். 114

நடுவுநிலையாக நின்று அறநெறியில் நிலைத்து வாழ்கின்றவன் அடைந்த வறுமைநிலையைக் கேடு என்று கொள்ளாது உலகம். 117

முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர் தூக்கும் துலாக் கோல்போல் அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும். 118

பிறர் பொருளையும் தம்பொருள்போல் போற்றிச்செய்தால், அதுவே வாணிகம் செய்வார்க்கு உரிய நல்ல வாணிக முறையாகும். 120

அடக்கமுடைமை

4. அடக்கம் ஒருவனை உயர்ந்த நிலையில் வைக்கும். அதிலும் சிறப்பாகச் செல்வர்க்கே அடக்கம் மற்றொரு செல்வம் போன்றது ஆகும். நாவைக் காக்கத் தவறினால் துன்பம் வரும். தீயினால் சுட்டபுண் ஆறிவிடும். ஆனால் நாவினால் சொன்ன தீய சொல் வடுவைப்போல் என்றும் மாறாது. சினம் தோன்றாமல் அடக்கம் உடையவனாக இருக்க வேண்டும்.

121. *அடக்கம் அமரர்உள் உய்க்கும் அடங்காமை*
Adakkam amararull uykkum adanggaamai
ஆர்இருள் உய்த்து விடும்.
aarirull uyththu vidum.

125. *எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவர் உள்ளம்*
Ellaarkkum nandraam pannithal avar ullllam
செல்வர்க்கே செல்வம் தகைத்து.
Selvarkkē selvam thagaiththu.

127. *யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்*
Yaakaavaar aayinum naakaakka kaavaakkaal
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு.
Sōkaappar solizhukkup pattu.

129. *தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே*
Theeyinaal sutta punn ullaarrum aaradhē
நாவினால் சுட்ட வடு.
Naaavinaal sutta vadu.

130. *கதம்காத்துக் கற்றுஅடங்கல் ஆற்றுவான் செவ்வி*
Kadham kaaththuk katru adangal aatruvaan sevvi
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.
Arram paarkkum aatrin nuzhaindhu.

SELF-CONTROL

121. Self-rule leads to realms of gods
Indulgence leads to gloomy hades.

Self-control places men among godmen. Indulgence leads him to dark inferno.

125. Humility is good for all
To the rich it adds a wealth special.

The humility of a self-controlled man does good to all. To the rich it is a special treasure.

127. Rein the tongue if nothing else
Or slip of tongue brings all the woes.

Control at least the tongue; if not, a slip of tongue entails grief and misery.

129. The fire-burnt wounds do find a cure
Tongue-burnt wounds rest a running sore.

Blister caused by fire shall heal; but caused by the tongue, it remains a running sore within.

130. Virtue seeks and peeps to see
Self-controlled savant anger-free.

Virtue waits on the way to see the beauty of the self-restrained savant free from anger.

121.	அடக்கம்	மனம், உடல், மொழி அடக்குதல்	self-control
	அமரர்	தேவர்	Gods
	உய்த்துவிடும்	புகுத்திவிடும்	drove into
	ஆர் இருள்	கொடிய நரகம்	dark inferno or hell
125.	பணிதல்	மரியாதை காட்டுதல்	to be humble
	செல்வர்	பணக்காரர்	rich
	தகைத்து	போலும்	likeness

127.	யாகாவார்	எதையும் காக்காதவர்	can't prevent anything
	நாகாக்க	நாக்கைக் காத்துக் கொள்க	to guard the tongue at least
	காவாக்கால்	காக்கா விட்டால்	if not guarded
	சோகாப்பர்	துன்பம் அடைவர்	to get into trouble or will entail misery.
	இழுக்கு	(சொல்)குற்றம்	fault
129.	தீ	நெருப்பு	fire
	புண்	காயம்	wound
	வடு	தழும்பு	scar
130.	கதம்	கோபம்	anger
	ஆற்றுதல்	செய்தல்	to do
	அறம்	தருமம்	virtue

அடக்கமுடைமை

அடக்கம் ஒருவனை உயர்த்தித் தேவருள் சேர்க்கும்; அடக்கம் இல்லாது இருத்தல் பொல்லாத இருள் போன்ற தீய வாழ்க்கையில் செலுத்திவிடும். 121

பணிவுடையவராக ஒழுகுதல் பொதுவாக எல்லார்க்கும் நல்லது ஆகும்; அவர்களுள் சிறப்பாகச் செல்வர்க்கே மற்றொரு செல்வம் போன்றது ஆகும். 125

காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்காவிட்டாலும் நாவையாவது காக்க வேண்டும்; காக்கத் தவறினால் சொற்குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர். 127

தீயினால் சுட்ட புண் புறத்தே வடு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும், ஆனால் நாவினால் தீய சொல் கூறிச் சுடும் வடு என்றும் ஆறாது. 129

சினம் தோன்றாமல் காத்துக் கல்வி கற்று, அடக்கம் உடையவனாக இருக்க வல்லவனுடைய செவ்வியை, அவனுடைய வழியில் சென்று அறம் பார்த்திருக்கும். 130

பொறையுடைமை

நிலம் எல்லாரையும் தாங்குவது. நிறை தவறாமல் வாழ விரும்புவோர் பொறுமை தவறக்கூடாது. அது தீயவரை எல்லாம் வெல்லும். தவறான சொல்லைப் பொறுப்பவர் துறவியைவிடத் தூயவர். உண்ணாது விரதம் இருப்பவர் ஒரு வகையில் பெரியவர். துன்பம் தரும் சொல்லைப் பொறுப்பவரே அவரைக் காட்டிலும் பெரியவர்.

151. *அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை*
Agazhvaaraith thaangum nilam pōlath thammai
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.
Igazhvaarp porruththal thalai.

154. *நிறைஉடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை*
Nirrai udaimai neengaamai vēnndin porrai udaimai
போற்றி ஒழுகப் படும்.
Potri ozhugap padum.

158. *மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்*
Migudhiyaan mikkavai seydhaaraith thaam tham
தகுதியான் வென்று விடல்.
Thagudhiyaan vendru vidal.

159. *துறந்தாரில் தூய்மை உடையர் இறந்தார்வாய்*
Thurrndhaaril thūymai udaiyar Irrandhaarvaai
இன்னாச்சொல் நோற்கிற் பவர்.
Innaach chol norrkirr pavar.

160. *உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்*
Unnnaadhu nōrrpaar periyar pirrar sollum
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.
Innaachol nōrrpaarin pin.

FORGIVENESS

151. **As earth bears up with diggers too**
To bear revilers is prime virtue.

To forbear abusers even like the earth that bears diggers is foremost virtue,

154. **Practice of patient quality**
Retains intact integrity.

Develop patient forbearance; that safeguards noble integrity and perfect dignity.

158. **By noble forbearance vanquish**
The proud that have caused you anguish.

Couquer insults of insolent proud by forbearance. That will bring them to their senses.

159. **More than ascetics they are pure**
Who bitter tongues meekly endure.

Purer than saints of renunciation are they who bear meekly bitter words of detractors.

160. **Who fast are great to do penance**
Greater are they who bear offence.

Greater are saints that fast in penance; greater are the patient that forbear other's offence.

151.	அகழ்வார்	தோண்டுபவர்	digger
	இகழ்வார்	பழிப்பவர்	those who insult
	பொறுத்தல்	தாங்கிக்கொள்ளுதல்	to bear
	தலை	சிறப்பு	virtuous
154.	நிறை உடைமை	நடு நிலமை	to be balanced
	நீங்காமை	விலகாமல்	to be fixed
	பொறையுடைமை	பொறுமை	patience

	ஒழுகப்படும்	பின்பற்றுதல்	to follow
158.	மிகுதி	அதிகமான	excessive insolence
	தகுதியான்	பொறுமையால்	by patience
	தாம்தம்	தத்தமது	their own
159.	துறந்தார்	ஆசைகளை மறந்தவர்	the renounced; renouncers
	இறந்தார்	எல்லை கடந்தவர்	beyond limit
	தூய்மை	மிகச் சிறந்தது	great
	இன்னாச்சொல்	தீய சொல்	bitter words
	நோற்கிற்பவர்	பொறுத்துக் கொள்பவர்	endurer
160.	உண்ணாது	சாப்பிடாது	to fast
	நோற்பார்	தவம் செய்பவர்	renounced person

பொறையுடைமை

தன்னை வெட்டுவோரையும் விழாமல் தாங்குகின்ற நிலம் போல, தம்மை இகழ்வாரையும் பொறுப்பதே நிலையான பண்பாகும். 151

நிறை உடையவனாக இருக்கும் தன்மை தன்னைவிட்டு நீங்காமலிருக்க வேண்டினால் பொறுமையைப் போற்றி ஒழுகவேண்டும். 154

செருக்கினால் தீங்கானவற்றைச் செய்தவரைத் தாம் தம்முடைய பொறுமைப் பண்பினால் பொறுத்து வென்று விட வேண்டும். 158

வரம்பு கடந்து நடப்பவரின் வாயில் பிறக்கும் கொடும் சொற்களைப் பொறுத்துக்கொள்பவர் துறந்தவரை விட தூய்மையானவர் ஆவர். 159

உணவு உண்ணாமல் நோன்பு கிடப்பவர், பிறர் சொல்லும் கொடுஞ் சொற்களைப் பொறுப்பவர்க்கு அடுத்த நிலையில் தான் பெரியவர் ஆவர் 160

புறங்கூறாமை

ஒருவர் குற்றம் செய்தார் என்று அவர் இல்லாதபோது சொல்வதுதான் புறங்கூறல். இது இல்லாதவரே சிறந்த அறம் உடையவர். தக்க வாழ்க்கை உடையவர். நல்ல மனமும் உடையவர். மற்றவர்களது குற்றத்தைச் சொல்வதற்கு முன்னே தன் குற்றத்தைப் பார்த்து நீக்கிவிட்டால் துன்பமே உண்டாகாது.

181. *அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்*
Arram kūrraan alla seyinum oruvan
புறம்கூறான் என்றல் இனிது
Purramkūrran endral inidhu

183. *புறம்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலின் சாதல்*
Purramkūrrip poyththu uyir vaazhdhalin saathal
அறம்கூறும் ஆக்கம் தரும்.
Arramkūrrum aakkam tharum.

185. *அறம்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறம்சொல்லும்*
Arram sollum nenjaththaan anmai purram sollum
புன்மையால் காணப் படும்.
Punmaiyaal kaannap padum

186. *பிறன்பழி கூறுவான் தன்பழி உள்ளும்*
Pirranpazhi kūrruvaan thanpazhi ullllum
திறன் தெரிந்து கூறப் படும்.
Thirran therindhu kūrrappadum.

190. *ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்*
Edhilaar kutrampōl thamkutram kaanngirrpin
தீது உண்டோ மன்னும் உயிர்க்கு.
Theedhu unndo mannum uyirkku.

AGAINST SLANDER

181. Though a man from virtue strays,
to keep from slander brings him praise.

A man may stray from virtue and do evil; but if he is free from slander, so much the better for him.

183. Virtue thinks it better to die,
Than live to backbite and to lie.

To die is more virtuous than living as a false talebearer sowing discard.

185. Who turns to slander makes it plain
His praise of virtue is in vain:

A man may praise his virtue; but slander betrays his vicious heart, his vanity.

186. His failings will be found and shown,
Who makes another's failings known.

The world shall find out and expose his evils who cries out other's evils.

190. No harm would fall to any man
If each his own defect could scan.

No harm happens to anyone if each man scans his own defect just as he does other's defect.

181.	அறம்	தருமம்	virtue
	கூறான்	சொல்லமாட்டான்	without saying
	இனிது	இனிமை	sweetness
183.	பொய்த்து	தவறுதல்	falsify
	சாதல்	இறத்தல்	to die
	ஆக்கம்	செல்வம்	wealth
185.	அருமை	சிறப்பு	rarity
	அன்மை	இல்லாத தன்மை	not having

	புறம்	கோள்	slander
	புன்மை	தாழ்வு	baseness
186.	பிறன்	மற்றவர்	the other man
	தன்	தன்னுடைய	his own
	பழி	குற்றம்	fault
	திறன் தெரிந்து	ஆராய்ந்து	to scan and find out
190.	ஏதிலார்	பகைவர்கள்	foes
	குற்றம்	தவறு	short-comings
	தீது	தீமை	harm
	மன்னும்	நிலையான	to be firm

ஒருவன் அறத்தைப் போற்றிக் கூறாதவனும் அறமல்லாதவற்றைச் செய்தாலும், மற்றவனைப்பற்றிப் புறங்கூறாமல் இருக்கிறான் என்ற சொல்லப்படுதல் நல்லது. 181

புறங்கூறிப் பொய்யாக நடந்து உயிர்வாழ்தலைவிட, அவ்வாறு செய்யாமல் வறுமையுற்று இறந்துவிடுதல், அற நூல்கள் சொல்லும் ஆக்கத்தைத் தரும். 183

அறத்தை நல்லதென்று போற்றும் நெஞ்சம் இல்லாத தன்மை, ஒருவன் மற்றவனைப்பற்றிப் புறங்கூறுகின்ற சிறுமையால் காணப்படும் 185

மற்றவனைப்பற்றிப் புறங்கூறுகின்றவன், அவனுடைய பழிகள் பலவற்றிலும் நோக்கத்தக்கவை ஆராய்ந்து கூறிப் பிறரால் பழிக்கப்படுவான். 186

அயலாருடைய குற்றத்தைக் காண்பதுபோல் தம் குற்றத்தையும் காணவல்லவரானால், நிலைபெற்ற உயிர்வாழ்க்கைக்குத் துன்பம் உண்டோ? 190

ஈகை

பயனை எதிர்பார்க்காமல் செய்கின்ற உதவிதான் ஈகை. நல்லது செய்வதற்கும் பிறரிடம் கொள்வது தீதே. மேல் உலகம் இல்லை என்றாலும் பிறர்க்குக் கொடுப்பதே நல்லது. பசியைப் பொறுப்பதைவிட அதை நீக்குவதே சிறந்தது. ஒருவர் தேடிய பொருளை மற்றவர்க்குத் தருவதே சிறந்த இன்பம் தரும். கொடாதவர் வறியர். இரப்பதைவிடத் துன்பமானது ஒன்றுமில்லை. ஆனால் உதவ முடியாதவர் சாவதும் நல்லதுதான். பொருள் இருந்தும் பிறர்க்கு கொடுக்காதவர் வறியவர்.

222. *நல்லாறு எனினும் கொளல்தீது மேல்உலகம்*
Nallaarru eninum kollal theedhu mēl ulagam
இல்எனினும் ஈதலே நன்று.
Il eninum eedhalē nandru.

225. *ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் அப்பசியை*
Aatruvaar aatral pasi aatral appasiyai
மாற்றுவார் ஆற்றலின் பின்.
Matruvar aatralin pin.

228. *ஈத்துஉவக்கும் இன்பம் அறியார் கொல் தாம் உடைமை*
Eethu uvakkum Inbam arriyaar kol thaam udaimai
வைத்து இழக்கும் வன்கணவர்.
Vaiththu izhakkum van kannavar.

229. *இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய*
Iraththalin innaadhu mandra nirappiya
தாமே தமியர் உணல்.
Thaamē thamiyar unnal.

230. *சாதலின் இன்னாதது இல்லை இனிதுஅதூஉம்*
Saadhalin innaadhadhu illai inidhu adhūvum
ஈதல் இயையாக் கடை.
Eedhal iyaiyaak kadai.

CHARITY

222. **To beg is bad e'en from the good**
To give is good, were heaven forbid.

Receiving is bad even from the good. Giving freely is good even if heaven is forbidden.

225. **Higher's power which hunger cures**
Than that of penance which endures.

The power of penance in enduring hunger is great indeed: but it is only next to curing hunger.

228. **The joy of give and take they lose**
Hard-hearted rich whose hoarding fails.

To give and eat is a joy. Hard-hearted misers who hoard and lose know not this joy perhaps.

229. **Worse than begging is that boarding**
Alone what one's greed is hoarding.

To eat singly what one has heaped in greed, is more painful than begging one's food.

230. **Nothing is more painful than death**
Yet more is pain of giftless death.

No pain is keener than death-pangs. Even that is welcome. But giftless death is more painful.

222.	நல்லாறு	நல்லவழி	a good path or unquestionable means
	கொளல்	வாங்குவது	to receive
	தீது	கெட்டது	evil
	ஈதல்	கொடுத்தல்	to give
225.	ஆற்றுவார்	தவம் செய்பவர்	who performs penance
	மாற்றுவார்	பசியைத் தீர்ப்பவர்	who removes other's hunger

	ஆற்றல்	திறமை; வலிமை	ability
228.	உடைமை	சொந்தப்பொருள்	own wealth
	வன்கண் அவர்	அருள் இல்லாதவர்	merciless persons
	ஈத்துஉவக்கும்	கொடுத்து மகிழ்தல்	delight in giving gift
229.	இரத்தல்	பிச்சை எடுத்தல்	to beg
	நிரப்பிய	சேர்த்த	gathered; amassed
	தமியர்	தனியர்	alone
	உணல்	சாப்பிடுதல்	eating
230.	சாதல்	இறத்தல்	to die
	ஈதல்	கொடுத்தல்	to give
	இன்னா	துன்பம்	evil, unpleasant
	இயையாக் கடை	முடியாத போது	when impossible

பிறரிடம் இருந்து பொருள் பெற்றுக்கொள்ளுதல் நல்ல வழியிலே என்றாலும் கொள்ளல் தீமையானது. மேலுலகம் இல்லை என்றாலும் பிறர்க்குக் கொடுப்பதே நல்லது. 222

தவ வலிமை உடையவரின் வலிமை பசியைப் பொறுத்துக் கொள்ளலாகும்; அதுவும் அப்பசியை உணவுகொடுத்து மாற்றுகின்றவரின் ஆற்றலுக்குப் பிற்பட்டது ஆகும். 225

தாம் சேர்த்துள்ள பொருளைப் பிறர்க்குக் கொடுக்காமல் வைத்திருந்து பின் இழந்துவிடும் வன்கண்மை உடையவர் பிறர்க்குக் கொடுத்து மகிழும் மகிழ்சியை அறியாரோ? 228

பொருளின் குறைபாட்டை நிரப்புவதற்காக உள்ளதைப் பிறர்க்கு ஈயாமல் தாமே தனியராய் உண்பது, வறுமையால் இரப்பதைவிடத் துன்பமானது. 229

சாவதைவிடத் துன்பமானது வேறொன்று இல்லை; ஆனால் வறியவர்க்கு ஒரு பொருள் கொடுக்க முடியாத நிலை வந்தபோது அச்சாதலும் இனியதே ஆகும். 230

அருளுடைமை

சிறந்த செல்வம் அருள்; இழிந்தவரிடம் இருப்பது பொருள். அருள் நெஞ்சினரிடம் இருள் நெருங்காது. பொருள் நிலையற்றது. அருளே நிலையுற்றது. அருளற்றவர் தம்மினும் தாழ்ந்தவரைத் துன்புறுத்தும்போது வலியவர் முன் தாம் அஞ்சி நிற்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

241. *அருள்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்*
Arull selvam selvaththull selvam porut selvam
பூரியார் கண்ணும் உள.
Pūriyaar kannnum ulla.

243. *அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த*
Arull sērndha nenjinarrkku illai irull sērndha
இன்னா உலகம் புகல்.
Innaa ulagam pugal.

246. *பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள் நீங்கி*
Porull neengip pochchaandaar enbar arull neengi
அல்லவை செய்தொழுகுவார்.
Allavai seythozhuguvaar.

247. *அருள்இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு*
Arull illaarkku avvulagam illai porull illaarkku
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.
Ivvulagam illaagi yaangu.

250. *வலியார்முன் தன்னை நினைக்க தான் தன்னின்*
Valiyaar mun thannai ninaikka thaan thannin
மெலியார்மேல் செல்லும் இடத்து;
Meliyaar mēl sellum idaththu.

COMPASSION

241. The wealth of wealth is wealth of grace
Earthly wealth e'en the basest has.

Compassion is the wealth of wealth. Material wealth even the meanest has. It is immaterial.

243. The hearts of mercy shall not go
Into dark worlds of gruesome woe.

The vital world of painful sufferings is not for hearts that glow with compassion.

246. Who grace forsake and graceless act
Their former loss and woes forget.

Their merciless acts have suffered woes in the past. Forgetting that sinners persist in graceless evils now.

247. This world is not for wealthless ones
That world is not for graceless swines.

This material world is not happy for the moneyless. That spiritual world is not for the merciless ones.

250. Think how you feel before the strong
When to the feeble you do wrong.

Imagine how you will tremble before the strong when you rudely attack and oppress the weak.

241.	பூரியார்	கீழ் நிலையுள்ள மக்கள்	people of base habits (vile)
243.	அருள் சேர்ந்த	இரக்கம் உள்ள	merciful
	இருள் சேர்ந்த	இரக்கம் இல்லாத	merciless
	புகல்	சேர்தல்	go into reach
246.	பொச்சாந்தார்	கடமை மறந்தவர்	the delinquent
	அல்லவை	கெட்டவை	evil

	ஒழுகுவார்	பின்பற்றுதல்	those who observe good practice
247.	அருள் இல்லார்	கருணை இல்லாதவர்	one without mercy
	இல்லாகி	இல்லை	without
250.	வலியார்	பலமானவர்	the strong
	மெலியார்	பலம் இல்லாதவர்	the weak
	தன்னின்	தன்னை விட	when compared to oneself

அருளுடைமை

பொருள்களாகிய செல்வங்கள் இழிந்தவரிடத்திலும் உள்ளன; (உயர்ந்தவர் இடத்தில் மட்டும் உள்ள) அருளாகிய செல்வமே செல்வங்களில் சிறந்த செல்வம் ஆகும். 241

அறியாமை ஆகிய இருள் பொருந்திய துன்ப உலகில் இருந்து வாழும் வாழ்க்கை, அருள் பொருந்திய நெஞ்சம் உடையவர்களுக்கு இல்லை. 243

அருள் இல்லாதவராய் அறமல்லாதவைகளைச் செய்து நடப்பவர்களை, உறுதிப் பொருளாகிய அறத்தில் இருந்து நீங்கித் தம் வாழ்க்கையில் குறிக்கோளை மறந்தவர் என்பர். 246

பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகத்து வாழ்க்கை இல்லாதவாறுபோல, உயிர்கள் இடத்தில் அருள் இல்லாதவர்க்கு அவ் உலகத்து வாழ்க்கை இல்லையாம். 247

(அருள் இல்லாதவர்கள்) தன்னைவிட மெலிந்தவர்மேல் துன்புறுத்தச் செல்லும் போது, தன்னைவிட வலியவரின் முன் தான் அஞ்சி நிற்கும் நிலைமையை நினைக்க வேண்டும். 250

T.A.G - 26

வாய்மை

வாய்மை என்பது என்ன? அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீமையில்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும் மனம் அறிந்து தீயதைச் சொல்பவரை அவர் மனமே சுடும். அப்படித் தீமை இல்லாமல் வாழ்பவரே எல்லாருடைய உள்ளத்திலும் வாழ்பவர். நீர் வெளியே சுத்தம் செய்வது போல வாய்மை உள்ளே (மனத்தைச்) சுத்தம் செய்கிறது. எல்லா விளக்கும் உண்மை அல்ல. பெரியோர்க்கு, மனத்தின் இருளை (இருட்டைப்) போக்கும் வாய்மையே விளக்கு ஆகும்.

291. *வாய்மை எனப்படுவது யாதுஎனின் யாதுஒன்றும்*
Vaaymai enap paduvadhu yaadhu enin yaadhu ondrum
தீமை இலாத சொலல்
Theemai ilaadha solal.

293. *தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்*
Thannenju arrivadhu poyyarrka poyththapin
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.
Thannenjē thannaich sudum.

294. *உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்*
Ulllaththaal poyyaadhu ozhugin ulagaththaar
உள்ளத்துள் எல்லாம் உளன்.
Ullllaththul ellaam ullan.

298. *புறம் தூய்மை நீரால் அமையும் அகம்தூய்மை*
Purram thūymai neeraal amaiyum agamthūymai
வாய்மையால் காணப்படும்.
Vaaymaiyaal kaannappadum.

299. *எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்*
Ellaa villakkum villakkalla saandrōrkkup
பொய்யா விளக்கே விளக்கு.
Poyyaa villakē villakku.

VERACITY

291. **If "What is truth"? the question be,**
It is to speak evil-free.

What is veracity; Truthfulness? It is to speak nothing harmful or offensive.

293. **Let not a man knowingly lie;**
Conscience will scorch and make him sigh.

Speak not what your heart knows a false. Conscience will scorch the wanton lier.

294. **He lives in loving hearts of all**
Who serves the Truth serene in soul.

Serene in soul, who acts in Truth at heart, lives long in the loving memory of all mankind.

298. **Water makes you pure outward**
Truth renders you pure inward.

Water makes you outside pure and Truth inside pure. Truth gives psychic purity.

299. **All lights are not lights for the wise;**
Truth light is light bright like Sun-light.

Truth-light is Sun-bright: It removes inner darkness. Sages regard no other light equal to Truth.

291.	வாய்மை	உண்மை	veracity (truthfulness)
	தீமை	தீயது	evil
293.	நெஞ்சு	மனம்	heart
	அறிவது	தெரிந்து கொள்வது	to know
294.	உள்ளம்	மனது	mind
	ஒழுகு	நடத்தை	live or act up to (conduct)
	உளன்	இருக்கிறான்	stay with

298.	புறம்	வெளியே	external
	தூய்மை	சுத்தம்	purity
	நீரான்	தண்ணீரால்	by water
	அமையும்	விளங்கும்	will become
	அகம்	உள்ளே (மனம்)	heart
299.	சான்றோர்	பெரியவர்	great man

வாய்மை என்று கூறப்படுவது எது என்றால், அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீமை இல்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும். 291

ஒருவன் தன் நெஞ்சம் அறிவதாகிய ஒன்றைக் குறித்துப் பொய் சொல்லக்கூடாது; பொய் சொன்னால், அதைக் குறித்துத் தன் நெஞ்சமே தன்னை வருத்தும். 293

ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் இல்லாமல் நடப்பானானால், அத்தகையவன் உலகத்தாரின் உள்ளங்களில் எல்லாம் இருப்பவனாவான். 294

புறத்தே தூய்மையாக விளங்குதல் நீரினால் ஏற்படும்; அதுபோல், அகத்தே தூய்மையாக விளங்குதல் வாய்மையால் உண்டாகும். 298

(புறத்தில் உள்ள இருளை நீக்கும்) விளக்குகள் எல்லாம் விளக்குகள் அல்ல; சான்றோர்க்கு (அகத்து இருள் நீக்கும்) பொய்யாமையாகிய விளக்கே விளக்கு ஆகும். 299

வெகுளாமை

கோபம் செல்லும் இடத்தில் கோபிக்காமல் இருப்பதே சிறந்தது. கோபிக்க மறந்த விடுவது அதை விடச் சிறந்தது. கோபம் முகத்தில் சிரிப்பையும் அழிக்கிறது. மனத்தில் இன்பத்தையும் கெடுக்கிறது. சினத்தைக் காக்கா விட்டால் அழிவுதான் வரும். சினம் (கோபம்) இல்லாதவர்தான் சிறந்த துறவி போன்றவர்.

301. *செல்இடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்இடத்துக்*
Sel idaththuk kaappaan sinam kaappaan alidaththuk
காக்கின் என் காவாக்கால் என்.
Kaakkin en kaavaakkaal en.

303. *மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய*
Marraththal vegulliyai yaarmaattum theeya
பிறத்தல் அதனான் வரும்.
Pirraththal athanaan varum.

304. *நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்*
Nagaiyum Uvagaiyum kollum sinaththin
பகையும் உளவோ பிற.
Pagaiyum ullavō pirra.

307. *சினத்தைப் பொருள்என்று கொண்டவன் கேடு*
Sinaththaip porull endru konndavan kēdu
நிலத்து அறைந்தான் கைபிழையாது அற்று.
Nilaththu arraindhaan kaipizhai yaadhu atru.

310. *இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்*
Irrandhaar irrandhaar anaiyar sinaththaith
துறந்தார் துறந்தார் துணை.
Thurrandhaar thurrandhaar thunnai.

RESTRAINING ANGER

301. Anger against the weak is wrong
It is futile against the strong.

To check anger against the weak is true restraint. It will carry no effect against the strong.

303. Off with wrath with any one
It is the source of sin and pain.

Anger entails sin and suffering. Forget anger against any one in any way.

304. Is this a foe like harmful ire
Which kills the smile and joyful cheer?

Anger, the cruel foe, kills smile on the face and joy in the heart and peace in the mind.

307. The wrath-lover to doom is bound
Like failless-hand that strikes the ground.

The hand that strikes the ground is bound to feel pain. The man who nourishes rage is doomed to suffer misery.

310. Dead are they who are anger-fed
Saints are they from whom wrath has fled.

They are dead who have lost themselves in anger. They are real saints from whom anger has taken leave.

301.	காப்பான்	கட்டுப்படுத்துபவன்	one who restrains
	சினம்	கோபம்	anger
	காவாக்கால்	கட்டுப்படுத்தா விட்டால்	if unrestrained
303.	மறத்தல்	மறந்து விடுதல்	forgetting
	வெகுளி	கோபம்	anger
	தீய	தீமை	evil
	பிறத்தல்	உண்டாக	to appear

304.	நகை	மலர்ச்சி	pleasing countenance
	உவகை	மகிழ்ச்சி	delight
	கொல்	அழித்தல்	kill
	பகை	விரோதி	enemy
307.	நிலத்து	தரையில்	on the ground
	அறைந்தான்	அடித்தவன்	aggressor
	அற்று	போல	like
310.	இறந்தார்	செத்தவர்	dead-person
	அனையர்	போன்றவர்	like
	துறந்தார்	விட்டவர்கள்	renouncer or recluse
	துணை	ஒப்பானவர்	similar

பலிக்கும் இடத்தில் சினம் வராமல் காப்பவனே சினம் காப்பவன்; பலிக்காத இடத்தில் காத்தால் என்ன? காக்கா விட்டால் என்ன? 301

யாரிடத்திலும் சினங் கொள்ளாமல் அதை மறந்துவிட வேண்டும்; தீமையான விளைவுகள் அந்தச் சினத்தாலேயே ஏற்படும். 303

முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தை விட ஒருவனுக்குப் பகையானவை வேறு உள்ளனவோ? 304

(தன் வல்லமை புலப்படுத்தச்) சினத்தைப் பொருளென்று கொண்டவன் அழிதல், நிலத்தை அறைந்தவனுடைய கை தப்பாததுபோல் ஆகும். 307

சினத்தில் அளவு கடந்து சென்றவர், இறந்தவரைப் போன்றவர்; சினத்தை அடியோடு துறந்தவர் துறந்தவர்க்கு ஒப்பாவர். 310

கல்வி

கற்றிட வேண்டியவைகளைத் திருத்தமாகக் கற்க வேண்டும். அவை கூறும் வழியில் நிற்கவேண்டும். கற்றவரே கண் உடையவர். மற்றவர் குருடர். படிக்கப் படிக்க, மணல் கேணிபோல் ஊறுவது கல்வி. ஒரு பிறவியில் கற்ற கல்வி வரும் பிறவிகளில் எல்லாம் உதவுவது. ஒருவனுக்கு சிறந்த செல்வம் அழிவற்ற கல்வியே ஆகும். மற்ற பொருள்கள் செல்வம் அல்ல.

391. *கற்க கசடு அறக் கற்பவை கற்றபின்*
Karrka kasadu arrak karrpavai katrapin
நிற்க அதற்குத் தக.
Nirrka atharrkuth thaga.

393. *கண்உடையர் என்பவர் கற்றோர் முகத்து இரண்டு*
Kann udaiyar enbavar katrōr mugaththu iranndu
புண்உடையர் கல்லாதவர்.
Punn udaiyar kallaadhavar.

396. *தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
Thottanaiththu ūrum mannarrkēnni maantharkuk
கற்றனைத்து ஊறும் அறிவு.
Katranaiththu ūrrum arrivu.

398. *ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு*
Orumaikkann thaan katra kalvi oruvarrku
எழுமையும் ஏமாப்பு உடைத்து.
Ezhumaiyum ēmaappu udaiththu.

400. *கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
Kēdu il vizhuch selvam kalvi oruvarrku
மாடு அல்ல மற்றையவை.
Maadu alla matraiyavai.

EDUCATION

391. **Lore worth learning, learn flawlessly**
Live by that learning thoroughly.

Learn flawlessly, perfectly the knowledge worth learning and live by that learning.

393. **The learned alone have eyes on face**
The ignorant two sores of disgrace

The learned alone have eyes on their face. To the ignorant, they are two sores.

396. **As deep you dig the sand spring flows**
As deep you learn the knowledge grows.

The sand spring flows with water as you dig deeper. By deeper study knowledge flows.

398. **The joy of learning in one birth**
Exalts man upto his seventh.

The heritage of culture acquired in one birth last to the seventh.

400. **Learning is wealth none could destroy**
Nothing else gives genuine joy.

Learning is the lasting joyful wealth; all other material wealth are lost in time.

391.	கசடற	குற்றம் இல்லாதவாறு	without mistakes
	கற்க	படிக்க	learn
	கற்பவை	படிக்கத் தகுந்தவை	all that is the lore worth learning
	நிற்க	கடைப் பிடித்தல்	practise
393.	புண்		wound
396.	தொட்டனைத்து	தோண்டிய அளவு	up to depth
	கேணி	கிணறு	well

	மாந்தர்	மக்கள்	people
	அறிவு		knowledge
398.	ஒருமை	ஒரு பிறப்பு	this birth
	எழுமை	ஏழு பிறப்பு	rising births
	ஏமாப்பு	காவல்	guard
400.	கேடு	குற்றம்	fault or flaw
	விழுச்செல்வம்	அழியாத செல்வம்	imperishable riches
	மாடு	செல்வம்	wealth

கல்வி கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும்; அவ்வாறு கற்றபிறகு கற்ற கல்விக்குத் தக்கவாறு நெறியில் நிற்கவேண்டும். 391.

கண் உடையவர் என்று உயர்வாகக் கூறப்படுகின்றவர் கற்றவரே. கல்லாதவர் முகத்தில் இரண்டு புண் உடையவர் ஆவர். 393

மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும்; அதுபோல் மக்களுக்கு கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும். 396

ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது அப் பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் ஒருவனுக்கு ஏழு பிறப்பிலும் உதவும் தன்மை உடையது ஆகும். 398

ஒருவனக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும்; கல்வி தவிர மற்றப் பொருள்கள் (அத்தகைய சிறப்புடைய) செல்வம் அல்ல. 400

அறிவுடைமை

அழிவு வராமல் காப்பதே அறிவு. யாரும் அழிக்க முடியாத உள் அரண் அறிவு. யார் எது சொன்னாலும் அதன் உண்மைப் பொருளை அறிவதே அறிவு. வருவதை அறிவதே அறிவு. அஞ்சுவதற்கு அஞ்சிடலே அறிவு. அறிவு உடையவரே எல்லாம் உடையவர்.

421. *அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்*
Arrivu atram kaakkum karuvi seruvaarkkum
உள்அழிக்கல் ஆகா அரண்.
Ull azhikkal aagaa arann.

423. *எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
Epporull yaaryaar vaayk kētpinum apporull
மெய்ப்பொருள் காண்பது அறிவு.
Meypporull kaannbadhu arrivu.

427. *அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்*
Arrivudaiyaar aavadhu arrivaar arrivilaar
அ:.துஅறி கல்லாதவர்.
Akthu arri kallaadhavar.

428. *அஞ்சுவதுஅஞ்சாமை பேதைமை அஞ்சுவது*
Anjuvadhu anjaamai pēthaimai anjuvathu
அஞ்சல் அறிவார் தொழில்.
Anjal arrivaar thozhil.

430. *அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்*
Arrivudaiyaar ellaam udaiyaar arrivilaar
என்உடையரேனும் இலர்.
Enudaiyarēnum ilar.

POSSESSION OF WISDOM

421. **Wisdom's weapon wards off all woes**
It is a fort defying foes.

Wisdom is a strong weapon against woes, an impregnable fortress which no enemy can storm.

423. **To grasp the Truth from everywhere**
From everyone is wisdom fair;

It is wisdom to sift matter and grasp the truth from anything, anyone and anywhere.

427. **The wise foresee what is to come**
The unwise lack in that wisdom.

The wise have a foresight of events. The ignorant do not foresee events.

428. **Fear the frighful and act wisely**
Not to fear the frightful's folly.

It is folly not to dread the dreadful. The wise act carefully fearing the frightful.

430. **Who have wisdom they are all full**
Whatev'r they own, misfits are nil.

Men of knowledge have everything at their command. Fools are nil with all their wealth.

421.	அற்றம்	அழிவு	destruction
	கருவி	ஆயுதம்	weapon
	செறுவார்	பகைவர்	enemies
	அரண்	கோட்டை	fortress
423.	எப்பொருள்	எந்தப்பொருளும்	everything
	மெய்ப்பொருள்	உண்மை அறிவு	real knowledge or import

427.	ஆவது	நடப்பது	happenings
	ஆவது அறிவார்	தெரிந்து கொள்வர்	those who can foresee
	அறிவிலார்	தெரிந்து கொள்ள முடியாதவர்	the ignorant
428.	அஞ்சு	பயப்படு	fear
	அஞ்சாமை	பயப்படாமல் இருத்தல்	fearless
	பேதைமை	அறிவு இல்லாமை	ignorance
430.	அறிவுஉடையர்	அறிவு உள்ளவர்	wise people

அறிவுடைமை

அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும்; அன்றியும் பகைகொண்டு எதிர்ப்பவர்க்கு அழிக்கமுடியாத உள்ளரணும் ஆகும். 421

எப்பொருளை யார் யாரிடம் கேட்டாலும் (கேட்டவாறே கொள்ளாமல்) அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவு ஆகும். 423

அறிவுடையவர் எதிர்காலத்தில் நிகழப்போவதனை முன்னே எண்ணி அறியவல்லார்; அறிவில்லாதவர் அதனை அறிய முடியாதவர். 427

அஞ்சத் தக்கதைக் கண்டு அஞ்சாதிருப்பது அறியாமை ஆகும்; அஞ்சத்தக்கதைக் கண்டு அஞ்சுவதே அறிவுடையவரின் தொழிலாகும். 428

அறிவுடையவர் (வேறொன்றும் இல்லாதிருப்பினும்) எல்லாம் உடையவரே ஆவர்; அறிவில்லாதவர் வேறு என்ன உடையவராக இருப்பினும் ஒன்றும் இல்லாதவரே ஆவர். 430

ஆள்வினையுடைமை

சோர்வில்லாது இருத்தலே எதைச் செய்வதற்கும் தகுந்த பெருமையை, முயற்சியை உண்டாக்கும். பிறர்க்கு உதவி செய்பவன் முயற்சியுடையவனாய் இருத்தல் வேண்டும். முயற்சி செல்வம் தருகிறது. ஊழ்வினையால் செயல் முடிவுறாது போயினும் முயற்சிக்கு உண்டான கூலியாவது கிடைக்கும். இடைவிடாமல் முயலுவதே ஊழை வெல்ல வல்லது.

611. *அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்*
Arumai udaiththu endru asaavaamai vēnndum
பெருமை முயற்சி தரும்.
Perumai muyarrchi tharum.

616. *முயற்சி திருவினை ஆக்கும் முயற்றுஇன்மை*
Muyarrchi thiruvinai aakkum muyatru Inmai
இன்மை புகுத்தி விடும்.
Inmai puguththi vidum.

618. *பொறிஇன்மை யார்க்கும் பழியன்று அறிவு அறிந்து*
porriinmai yaarkkum pazhiyandru arrivu arindhu
ஆள்வினை இன்மை பழி.
Aallvinai inmai pazhi.

619. *தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சி தன்*
Dheyvaththaan aagaadhu eninum muyarrchi than
மெய்வருத்தக் கூலி தரும்.
Meyvaruththak kūli tharum.

620. *ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றி*
Uzhaiyum uppakkam kaannbar ulaivu indri
தாழாது உஞற்றுபவர்.
Thaazhaadhu ugnatru bavar.

MANLY EFFORT

611. **Feel not frustrate saying "Tis hard"**
Who tries attains striving's reward.

Do not lose heart saying ""This is hard to do" Striving hard brings you rich reward.

616. **Industry adds prosperity**
Indolence brings but poverty

Industry always promotes prosperity. Indolence brings only dire poverty and misery.

618. **Misfortune is disgrace to none**
The shame is nothing learnt or done.

Misfortune is not a disgrace to any one. It is shameful not to learn and do a work.

619. **Though fate is against fulfilment**
Hard labour has ready payment.

Though fate stands in the way, strenuous effort yields fruit. Labour pays what fate denies.

620. **Tireless toiler's striving hand**
Shall leave even the fate behind.

Strenuous strivers toiling hard, shall leave behind even fate and go forward to success.

611.	அருமை	கடினமானது	difficult
	அசாவாமை	களைப்பு அடையாமை	not losing heart or despairing
	பெருமை	சிறப்பு	greatness
616.	முயற்சி	ஊக்கம்	effort; perseverence
	திருவினை	வெற்றி	victory
	புகுத்திவிடும்	ஆழ்த்திவிடும்	would drown into [poverty]

618.	பொறி	விதி	fate
	பழி	குற்றம்	disgrace
	ஆள்வினை	முயற்சி	manly effort
619.	ஆகாது	நடக்காது	can't be
	மெய்வருத்த	உடல் வருத்த	to labour
620.	ஊழ்	விதி	fate
	உப்பக்கம் காண்பர்	தோல்வியடையச் செய்வர்	will vanquish
	உலைவு	மனத் தளர்வு, சோர்வு அடைதல்	despondent or forlorn state of mind

ஆள்வினையுடைமை

இது செய்வதற்கு அருமையானது என்று சோர்வுறாமல் இருக்கவேண்டும்; அதைச் செய்வதற்குத் தக்கபெருமையை முயற்சி உண்டாக்கும். 611

முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும். முயற்சி இல்லாதிருத்தல் அவனுக்கு வறுமையைச் சேர்த்து விடும். 616

நன்மை விளைக்கும் ஊழ் இல்லாதிருத்தல் யார்க்கும் பழி அன்று; அறிய வேண்டியவற்றை முயற்சி செய்யாதிருத்தலே பழி. 618

ஊழின் காரணத்தால் ஒரு செயல் முடியாமல் போகுமாயினும், முயற்சி தன் உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியையாவது கொடுக்கும். 619

சோர்வு இல்லாமல் முயற்சியில் குறைவு இல்லாமல் முயல்கின்றவர், (செயலுக்கு இடையுறாக வரும்) ஊழையும் ஒரு காலத்தில் தோல்வியுறச் செய்வர். 620.

நட்பு

செயற்கரியது நட்பே. அது எல்லாம் காக்கவும் வல்லது. நூல் கற்கக் கற்க இன்பம் பெருகும். நட்பு பழகப் பழக இன்பம் பெருகும். அகமும் முகமும் மலர உள்ளன்பு கொண்டு நேசிப்பதே நட்பு. உடுத்திய உடை நெகிழ நேர்ந்தவுடன் கை அதைத் தடுத்து நிறுத்தி மானம் காப்பதைப்போல, உடனே உதவுவது தான் நட்பு. வேறுபாடு இல்லாமல் எப்போதும் இயன்றது எல்லாம் செய்வதே நட்பின் சிறந்த நிலை.

781. *செயற்கு அரிய யாஉள நட்பின் அதுபோல்*
Seyarrku ariya yaa ulla natpin adhupōl
வினைக்குஅரிய யாஉள காப்பு.
Vinaikku ariya yaa ulla kaappu.

783. *நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்*
Navildhorum nūl nayam pōlum payil thorum
பண்புடை யாளர் தொடர்பு.
Pannbudai yaallar thodarbu.

786. *முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து*
Mugamnaga natpadhu natpandru nenjaththu
அகம்நக நட்பது நட்பு.
Agamnaga natpadhu natpu.

788. *உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே*
Udukkai izhandhavan kai pōla aangē
இடுக்கண் களைவதாம் நட்பு.
Idukkann kallaivadhaam natpu.

789. *நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்புஇன்றி*
Natpirrku veetririkkai yaadhenil kotpu indri
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.
Ollumvaai ūndrum nilai

FRIENDSHIP

781. **Like friendship what's so hard to gain**
That guards one against acts villain?

What is there in the world so hard to get like friendship? Against vile foes, what better safeguard can one get?

783. **Like taste in books good friendship grows**
The more one moves the more he knows.

The friendship with worthy men is like taste in the study of good books. The more we study the more we know.

786. **Friendship is not mere smile on face**
It is the smiling heart's embrace.

To smile on the face, this is not friendship. But it is the inner joy of the heart's psychic embrace.

788. **Friendship hastens help in mishaps**
Like hands picking up dress that slips.

Genuine friendship hastens to redress distress even like the hand which picks up quickly the garment that slips.

789. **Friendship is enthroned on the strength**
That always helps with utmost warmth.

True friendship is enthroned on the strength of warm, loving mutual help and support on all occasions.

781.	செயற்குஅரிய	செய்வதற்கு அரிய	difficult to acquire
	நட்பு	சிநேகிதம்	friendship
	வினைக்கு அரிய	தொழிலுக்கு அரிய	difficult to execute
783.	நூல்	புத்தகங்கள்	books
	நவில்தல்	கற்றல்	to study
	பயில்தல்	பழகுதல்	cultivate
	பண்புஉடையவர்	நல்ல குணம் உடையவர்	virtuous people
	தொடர்பு	சிநேகிதம்	friendship; association

786.	முகநக	முகத்தில் மட்டும் சிரிப்பு	showy smile
	நட்பு	சிநேகிதம்	friendship
	நெஞ்சம்	இதயம்	heart
	அகநக	நெஞ்சத்துசிரிப்பு	real laughter
788.	உடுக்கை	ஆடை	dress
	இழந்தவன்	அவிழ்ந்தவன்	one whose garment has slid away
	இடுக்கண்	துன்பம்	distress
	களைவது	பாதுகாத்தல்	redress
789.	இருக்கை	இருக்கும்இடம்	seat
	கொட்புஇன்றி	மாற்றமில்லாமல்	without change
	ஒல்லும்	முடிந்த	possible

நட்பு

நட்பைப் போல் செய்துகொள்வதற்கு அருமையானவை எவை உள்ளன? அதுபோல் தொழிலுக்கு அரிய காவலாக இருப்பவை எவை உள்ளன? 781

பழகப் பழக நற்பண்பு உடையவரின் நட்பு இன்பம் தருதல், நூலின் நற்பொருள் கற்கக் கற்க மேன்மேலும் இன்பம் தருதலைப் போன்றது ஆகும். 783

முகம் மட்டும் மலரும்படியாக நட்புச் செய்வது நட்பு அன்று; நெஞ்சமும் மலரும் படியாக உள்ளன்பு கொண்டு செய்வதே நட்பு ஆகும். 786

உடை நெகிழ்ந்தவனுடைய கை, உடனே உதவிக் காப்பது போல், (நண்பனுக்குத் துன்பம் வந்தால்) அப்பொழுதே சென்று துன்பத்தைக் களைவது நட்பு. 788

நட்புக்குச் சிறந்த நிலை எது என்றால், எப்போதும் வேறுபடுதல் இல்லாமல் முடியும்போது எல்லாம் உதவிசெய்து தாங்கும் நிலைஆகும். 789.

மானம்

குடிப்பெருமை கெடுக்கும் எதையும் செய்யக்கூடாது. உயர்வுக்கு உரிய நிலையில் இருந்து தாழ நேர்வது, தலையில் இருந்து மயிர் விழ நேர்ந்தால், மதிப்பு இழப்பது போன்றது. மலை போன்றவரும் குன்றி மணியளவு தீதால் விழ்வர். மானம் விட்டு உயிர் வாழ்வது வாழ்வன்று. மானமுடையர் புகழையே உலகம் ஏத்துகிறது.

961. *இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்*
Indri yamaiyaach chirrappina aayinum
குன்ற வருப விடல்.
Kundra varuba vidal.

964. *தலையின் இழிந்த மயிர் அனையர் மாந்தர்*
Thalaiyin izhindha mayiranaiyar maandhar
நிலையின் இழிந்தக் கடை.
Nilaiyin izhindhak kadai.

965. *குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ*
Kundrin anaiyaarum kundruvar kundruva
குன்றி அனைய செயின்
Kundri anaiya seyin.

969. *மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்*
Mayir neeppin vaazhaak kavari maa annaar
உயிர்நீப்பர் மானம் வரின்.
Uyir neeppar maanam varin.

970. *இளிவரின் வாழாத மானம் உடையார்*
illivarin vaazhaadha maanam udaiyaar
ஒளிதொழுது ஏத்தும் உலகு.
Olli thozhudhu ēththum ulagu.

HONOUR

961. Though needed for your life in main,
From mean degrading acts refrain.

Reject degrading acts that lower your honour even if they are indispensable for your living.

964. Like hair fallen from head are those
Who fall down from their high status.

Men fallen from their high status are worthless like a hair fallen from the head.

965. Even hill like men will sink to nought
With abrus-grain-like small default.

Hill-like men turn to nothing, with defects even small like the abrus-grain (Kundri).

969. Honour lost, the noble expire
Like a yak that loses its hair.

Hair lost, the yak lives not. Honour lost, noble men leave their life.

970. Their light the world adores and hails
Who will not live when honour fails.

Noble men do not outlive loss of honour. The world hails their glory.

961.	இன்றியமையாத	முக்கியமான	indispensable
	சிறப்பு	பெருமை உள்ள	important acts
	குன்ற	குறைய	decrease
964.	இழிந்த	கொட்டிய	fallen
	நிலை	பதவி	status
965.	குன்று	சிறிய மலை	hill
	குன்றுவ	கீழ்நிலைப்படுத்தும் செயல்கள்	degrading acts

969. கவரிமான்		deer
மானம்		honour
உயிர்		life
970. இழிவு	தாழ்வு	indignity
தொழுதல்	வணங்குதல்	worship
உலகு	உலகம்	world
ஏத்தும்	வணங்குதல்	praise, worship

மானம்

இன்றியமையாத சிறப்பை உடைய செயல்களே ஆயினும், குடிப்பெருமை தாழுமாறு வரும் செயல்களை ஒருவன் செய்யாமல் விட வேண்டும். 961

மக்கள் தம் உயர்வுக்கு உரிய நிலையிலிருந்து தாழ்ந்தபோது, தலையிலிருந்து விழுந்து தாழ்வுற்ற மயிரினைப் போன்றவர் ஆவர். 964

மலைபோல் உயர்ந்த நிலையில் உள்ளவரும் தாழ்வுக்குக் காரணமான செயல்களை ஒரு குன்றிமணி அளவு செய்தாலும் தாழந்து போய்விடுவர். 965

தன் உடம்பில் இருந்து மயிர் நீங்கினால் உயிர் வாழாக் கவரிமானைப் போன்றவர் மானம் அழிய நேர்ந்தால் உயிரை விட்டுவிடுவர். 969

தமக்கு யாதேனும் அழிவு நேர்ந்தால் உயிர்வாழாத மானம் உடையவரின் புகழை உலகத்தார் தொழுது ஏத்தி நிற்பார்கள். 970

பண்பு உடைமை

இயற்கையில் நல்லவர் பணிவுடன் விளங்குவர். அன்பும், உயர்ந்த குடிப்பிறப்பும் அவருக்கு இயற்கை ஆகும். இப்படிப் பட்டவராலேதான் இந்த உலகம் நிலைத்திருக்கிறது. வெறும் அறிவுக்கூர்மை மட்டும் பயனற்றது. அப்படி இருந்தால், அவருடைய செல்வம் அசுத்தமான பாத்திரத்தினால் பால்கெடுவது போன்றதாகும்.

991. *எண்பதத்தால் எய்தல் எளிதுஎன்ப யார்மாட்டும்*
Ennpadhaththaal eydhal ellidhu enba yaar maattum
பண்புடைமை என்னும் வழக்கு.
Pannbudaimai ennum vazhakku.

992. *அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்*
Anbudaimai aandra kudippiraththal Ivvirranndum
பண்புடைமை என்னும் வழக்கு.
Pannbudaimai ennum vazhakku.

996. *பண்புஉடையார் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்*
Pannbu udaiyaar pattuunndu ulagam adhu indrēl
மண்புக்கு மாய்வது மன்.
Mannbukku maaiyvadhu man.

997. *அரம்போலும் கூர்மையரேனும், மரம் போல்வர்*
Aram pōlum kūrmaiyarēnum maram pōlvar
மக்கள் பண்பு இல்லாதவர்.
Makkall pannbu Illaadhavar.

1000. *பண்பு இலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்*
Pannbu Ilaan petra perunjselvam nanpaal
கலம் தீமையால் திரிந்து அற்று.
Kalam Theemaiyaal Thirindhu Atru.

COURTESY

991. To the polite free of access
Easily comes courteousness.

Courtesy is natural to polite gentlemen who kindly receive all without reserve.

992. Humanity and noble birth
Develop courtesy and moral worth.

Kindness to all and noble birth are the two virtues that develop good courtesy.

996. The world rests with mannered best
Or it crumbles and falls to dust.

The world is sustained by men of manner and good nature, or it shall crumble into dust and die.

997. The mannerless though sharp like file
Are like wooden blocks indocile.

The ill-mannered, though sharp in brain like a file, are no better than wooden blocks.

1000. The wealth heaped by the churlish base
Is pure milk soured by impure vase.

Great wealth heaped up by a discourteous man is useless like milk turned sour by an impure vessel.

991.	என்பதத்தால்	எளிய தன்மை	by easy means
	எய்தல்	அடைதல்	to get
	எளிது	சுலபம்	easy
	பண்பு உடைமை	நல்லகுணம்	having cultured
	வழக்கு	பழக்கம்	usage
992.	அன்புடைமை	பரிவுஉடைமை	having love
	ஆன்ற குடிப் பிறத்தல்	உயர்ந்த குடும்ப தோற்றம்	having been born in a noble family

996. பண்பு உடையார்	சிறந்தவர்	worthy person
பட்டு	பொருந்தி இருத்தல்	staying
மண்புக்கு	மண்ணில் விழுந்து	falling to ground
மாய்வது	அழிவது	to perish
மன்	உண்மை	fact
997. அரம்	ரம்பம்	file
பண்பு	குணம்	quality
1000. செல்வம்	பணம்	wealth
தீமையால்	அழுக்கால்	because of impurity
அற்று	போல	like

பண்பு உடைமை

பண்பு உடையவராக வாழும் நல்வழியை, யாரிடத்திலும் எளிய செவ்வியுடன் இருப்பதால் அடைவது எளியது என்று கூறுவர். 991

அன்புடையவராக இருத்தல், உயர்ந்த குடியில் பிறந்த தன்மை அமைந்திருத்தல் ஆகிய இவ்விரண்டும் பண்பு உடையவராக வாழும் நல்வழியாகும். 992

பண்பு உடையவரிடத்தில் பொருந்தியருப்பதால் உலகம் உள்ளதாய் இயங்குகின்றது. அஃது இல்லையானால் மண்ணில் புகுந்து அழிந்துபோகும். 996

மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர், அரம்போல் கூர்மையான அறிவுடையவரானாலும், ஓரறிவுயிராகிய மரத்தைப் போன்றவரே ஆவர். 997

பண்பு இல்லாதவன் பெற்ற பெரிய செல்வம், வைத்த கலத்தின் தீமையால் நல்ல பால் தன் சுவை முதலியன கெட்டாற் போன்றதாகும். 1000